ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

சிறிதோர்காலமாவது சேர்ந்து ஓரிடத்திலிருப்பவர் பரஸ்பரம் நேசமாயிருக்கவேணுமென்று நினைப்பார்கள். கிஞ்சிற்றேனுமுதவியடைந்தவர் உதவிபுரிந்தவரிடம் நன்றிபாராட்டுவார்கள். ஓரிடத்திற் சேர்ந்து படித்தவர் வேறிடம் சென்றாலும் கண்டபோது அந்த ஸ்நேஹத்தைக் கொண்டாடுவார்கள். அப்படியிருக்கையில் நீண்டகாலமாக உபகாரத்தை அடைந்தவன் உபகாரம்செய்தவனிடம் நன்றி பாராட்டுவானென்று சொல்லவும் வேண்டுமோ? வம்சபரம்பரையாக ஓர் பிரபுவையோ ராஜாங்கத்தையோ ஆசிரயித்திருப்பவன் ஒருபொழுதும் அவர்களை மறக்கமாட்டான்; அவர்கள் வார்த்தையைத் தட்டமாட்டான்; அவர்களுக்கு வேண்டியவர்களைக் கண்டவிடத்து அன்பாகப்பேசி ஆதரித்துவருவானென்பது பிரஸித்தமல்லவா! இதுபோலவே ஸிருஷ்டிகாலந்தொடங்கி நாளது வரையிலும் ஜன்மபரம்பரையாக எவராதீனமாயிருக்கிறோமோ, எவர் நமக்கு வேண்டிய பயனையளித்து அருள்புரிகின்றாரோ அந்த பரமேசுவரனிடம் நன்றியல்லவா பாராட்டவேண்டும். அவரிடம் பக்திசெய்பவரைக் கண்டால் ஆதரவாகப்பேசி உபசரித்தல்லவா வரவேண்டும். அப்படிக்கில்லாமல் தற்காலத்திய சிலர் பரமேசுவரனது ஆக்ஞாரூபமான சுருதி ஸ்மிருதி முதலியவைகளையனுஸரிக்காமலிருப்பதுமன்றி முற்றிலுமவைகட்கு விரோதமாகவே நடப்பதோடு அந்தகிரந்தங்களையெல்லாம் தீவைத்தெரித்துவிடவேண்டுமென்று சொல்லியும் செய்தும்வருகின்றார்கள். தங்கள் தங்களுக்குரியபடி விதிக்கப்பட்டுள்ள வர்ணாசிரமதர்மானுஷ்டானங்களால் பரமேசுவரனை ஆராதித்துவரும் ஸாதுக்களைக் கண்டபடி தூஷித்துத்திரிகின்றார்கள். இப்படியிருக்கையில் இவர்கள் பரமாப்தனாகிய பரமேசுவரனிடம் நன்றி பாராட்டுவதெங்கே? அவரிடம் தொண்டுசெய்பவரைக் கொண்டாடுவதெங்கே? கேவலமான ஒரு மனுஷ்யனுடைய தாக்ஷிண்யத்தைத் தட்டமுடியாமல் பரமேசுவரனது ஆக்ஞையை மீறி நடத்திவிடுகிறார்கள். இது ராஜாக்ஞையைமீறி ஸேவகனது தாக்ஷிண்யத்திற்குக் கட்டுப்படுவதுபோலிருக்கின்றது. ஐஹிகமான சிலக்கிலேசங்களைச் சஹிக்கமுடியாமல் கோரமான நரகத்தில் விழத்துணிகின்றார்கள். இது எறும்புகடியைப் பொறுத்துக்கொள்ளமாட்டாதவன் பாம்பின் வாயில் கையைவிடத்துணிவதுபோலிருக்கின்றது. இவர்களிஷ்டப்படிக்கெல்லாம் நடப்பதற்குக் கேழ்வி கேழ்ப்பாடு இல்லையென்று நினைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அந்த நினைப்பு நிறைவேறாது. எதைச் செய்தாலும் கேழ்விமுறையில்லையென்று ராஜாங்கத் துவேஷமாய் நடப்பவன் நினைப்பு நிலைக்குமா? அவர்களது தீயவழி நாடாமல் ஈசனை நேசித்து யாவரும் சுகமடைவார்களாக. சுபம். பா—ர்.

# ஆர்யதர்மம்.

சுக்ல-௵ ஆடி-௴ ௨௪௨


## தர்மாதிக்கிரமம் தகாதகாரியம்.

ஸர்வப்பிராணிகளும் இம்மையிலும், மறுமையிலும், வேண்டிய பயனைப் பெறுவதற்காகவே பரமகருணாமூர்த்தியான பரமேசுவரன் வேதவாயிலாகத் தர்மத்தை வெளியிட்டிருக்கிறார். அதை அனுஷ்டித்தாற்றான் க்ஷேமம் கிடைக்கும். ஆகவே க்ஷேமத்தைக்கோரியவர்கள் அந்த தர்மமார்க்கத்தை மீறிநடக்கக்கூடாது. அதை மீறி நடந்தால் க்ஷேமம் கிடைக்காதென்பது மாத்திரமல்ல, பலவித கஷ்டங்களையடையும்படிக்கும் நேர்ந்துவிடும். கஷ்டப்படுவதற்கு தர்மத்தை அதிக்கிரமிப்பதும், அதர்மத்தையாதரிப்பதுமே காரணமென்று சாஸ்திரங்களில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் கஷ்டப்படுகின்றவர் இந்த இரஹஸ்யத்தைத் தெரிந்து கொள்ளுவதில்லை. கஷ்டப்படுவதின் காரணத்தை வெவ்வேறு விதமாக நினைத்துக்கொண்டு அதைப் பரிஹரிக்க முயலுகின்றனர். அந்த முயற்சி பயன்படாமற்போவதினால் அவர் நினைத்தது சரியானநினைப்பல்லவென்றுஸ்பஷ்டமாகின்றது. இவர் நினைத்தபடி கஷ்டத்தின் காரணம் தர்மாதிக்கிரமணம், அதர்மாசரணமிவைகளைத் தவிர வேறேதாவது இருக்குமாயின் அவைகளை இன்னதென்று நிச்சயமாகத் தெரிந்துகொண்டு இலகுவாய் விலக்கிவிட்டுக் கஷ்டப்படாமல் சுகமாயிருக்கலாமல்லவா! அப்படி சுகப்படாமையால் கஷ்டப்படுவதற்கு தர்மத்தை விடுவதும் அதர்மத்தை நாடுவதுந்தான் காரணமென்று சாஸ்திரங்களில் தீர்மானிக்கப்பட்டதே உண்மையாக நிலைக்கின்றது. பிராமணாதிகளுக்குரிய உபநயன விவாஹாதிகளான ஸம்ஸ்காரங்கள் இரண்டொரு வருஷத்திற்கு முந்தியகாலம் வரையில் உசிதகாலத்தில் அனுஷ்டிக்கப்பட்டுவந்தன. தற்போது இரண்டொரு வருஷகாலமாக அவைகளின் காலவரையைப்பற்றி அனேகவித சூழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதிற் சிலர் சாஸ்திரமென்ப

தெல்லாம் ஸ்வயநலம் கருதிய சில அந்தணர்கள் கற்பித்துக்கொண்டதானபடியால் அதை எதிர்பாராமலே நம்மிஷ்டம்போல் விவாஹாதி காலங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்கிறார்கள். இந்த வார்த்தை பார்ப்பனரல்லாதார் சொல்லுகிறபடியால் பிராமணப்பெண்களின் விவாஹ வயதைப்பற்றி அவர்கள் பேச இடமில்லை. ஸ்வயநலத்தைப் பாராட்டியோ, பொதுநலத்தைப் பாராட்டியோ, ஒருவழியிலிரங்கினவர்கள் மற்றவர் சொல்வதை கேட்பார்களா? தர்மவிஷயத்தில் பிராமணர்களுக்கு மற்றவர் போதிப்பதென்பது விபரீதம். பிராமணரல்லாதார் பெண்களின் விவாஹவயதைப்பற்றியும் பேசவேண்டியதில்லை. அதை எப்படி வேண்டுமோ அப்படிச் செய்துக் கொள்ளலாமென்று சாஸ்திரமும், ஸம்பிரதாயமும் இருப்பதால் அது சொன்னதையே சொல்லுவதாகும். இதற்காக வேறுசிலர் சாஸ்திரத்தையே பிரமாணமாக நம்பினவர்களுக்கு “சாஸ்திரமெல்லாம் அவர்களாக ஏற்படுத்திக்கொண்டது. அதனால் அதை நம்பக்கூடாது” என்று கூறினால் அவர்கள் கேட்கமாட்டார்கள். சாஸ்திரத்திலேயே பிரௌடா விவாஹம் விதிக்கப்படுகிறதென்றால்தான் கேட்பார்கள் என்று சாஸ்திர ஆராய்ச்சி குறைந்த ஆர்யச்சிறுவர்களுக்கு “சாஸ்திரம் பிரௌடா விவாஹத்தைப் போதிக்கிறது” என்று வஞ்சனையாக போதித்து புத்தியைக் கலக்கின்றனர். அதற்காக பாலிகா விவாஹத்தை விதிக்கும் வசனங்களுக்கெல்லாம் பிரௌடாவிவாஹபரமாகப் பொருள் கற்பிக்கின்றனர். இவ்வாறு அக்னிஹோத்திராதி ஸகல வைதிகதர்மங்களுக்கும் அடிஸ்தானமான விவாஹத்திற்கு அங்கமான ஸ்திரீகளின் வயது தாறுமாறுகக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இதைப்பற்றி அரசாங்கத்திலும் சட்டம் கற்பிக்கப்படவேண்டுமென் றுமுச்சி செய்யப்பட்டு வருகின்றது. இப்படியெல்லாம் தர்மத்தையதிக்கிரமிப்பது தகாதகாரியமென்று ஆங்காங்கு பண்டிதர்கள்மூலமாய் ஸபை நடத்தி அனேக ஆஸ்திக ஜனங்களின் அபிப்பிராயப்படி தீர்மானித்து விஷயத்தை மஹா ஜனங்களுக்கு போதித்திருக்கிறபடி அரசாங்கத்தாருக்கும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. சமீபத்தில் நெல்லூரிலும் வர்ணாச்ரம தர்ம ஸபையொன்று நடந்தது. அதில் அனேக பண்டிதர்கள் விஜயம் செய்திருந்தார்கள். பிரும்மஸ்ரீ மஹா-ள-ள-ஸ்ரீ T. R.ராமசந்திரய்யாவர்களது அக்கிராசனத்தின் கீழ் பாலிகாவிவாகமே

# ஆர்ய தர்மம்.

சுக்ல-௵ ஆடி-௴ ௨௪௨


## தர்மாதிக்கிரமம் தகாதகாரியம்.

ஸர்வப்பிராணிகளும் இம்மையிலும், மறுமையிலும், வேண்டிய பயனைப் பெறுவதற்காகவே பரமகருணாமூர்த்தியான பரமேசுவரன் வேதவாயிலாகத் தர்மத்தை வெளியிட்டிருக்கிறார். அதை அனுஷ்டித்தாற்றான் க்ஷேமம் கிடைக்கும். ஆகவே க்ஷேமத்தைக்கோரியவர்கள் அந்த தர்மமார்க்கத்தை மீறிநடக்கக்கூடாது. அதை மீறி நடந்தால் க்ஷேமம் கிடைக்காதென்பது மாத்திரமல்ல, பலவித கஷ்டங்களையடையும்படிக்கும் நேர்ந்துவிடும். கஷ்டப்படுவதற்கு தர்மத்தை அதிக்கிரமிப்பதும், அதர்மத்தையாதரிப்பதுமே காரணமென்று சாஸ்திரங்களில் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் கஷ்டப்படுகின்றவர் இந்த இரஹஸ்யத்தைத் தெரிந்து கொள்ளுவதில்லை. கஷ்டப்படுவதின் காரணத்தை வெவ்வேறு விதமாக நினைத்துக்கொண்டு அதைப் பரிஹரிக்க முயலுகின்றனர். அந்த முயற்சி பயன்படாமற்போவதினால் அவர் நினைத்தது சரியானநினைப்பல்லவென்றுஸ்பஷ்டமாகின்றது. இவர் நினைத்தபடி கஷ்டத்தின் காரணம் தர்மாதிக்கிரமணம், அதர்மாசரணமிவைகளைத் தவிர வேறேதாவது இருக்குமாயின் அவைகளை இன்னதென்று நிச்சயமாகத் தெரிந்துகொண்டு இலகுவாய் விலக்கிவிட்டுக் கஷ்டப்படாமல் சுகமாயிருக்கலாமல்லவா ! அப்படி சுகப்படாமையால் கஷ்டப்படுவதற்கு தர்மத்தை விடுவதும் அதர்மத்தை நாடுவதுந்தான் காரணமென்று சாஸ்திரங்களில் தீர்மானிக்கப்பட்டதே உண்மையாக நிலைக்கின்றது. பிராமணாதிகளுக்குரிய உபநயன விவாஹாதிகளான ஸம்ஸ்காரங்கள் இரண்டொரு வருஷத்திற்கு முந்தியகாலம் வரையில் உசிதகாலத்தில் அனுஷ்டிக்கப்பட்டுவந்தன. தற்போது இரண்டொரு வருஷகாலமாக அவைகளின் காலவரையைப்பற்றி அனேகவித சூழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதிற் சிலர் சாஸ்திரமென்ப

தெல்லாம் ஸ்வயநலம் கருதிய சில அந்தணர்கள் கற்பித்துக்கொண்டதானபடியால் அதை எதிர்பாராமலே நம்மிஷ்டம்போல் விவாஹாதி காலங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்கிறார்கள். இந்த வார்த்தை பார்ப்பனரல்லாதார் சொல்லுகிறபடியால் பிராமணப்பெண்களின் விவாஹ வயதைப்பற்றி அவர்கள் பேச இடமில்லை. ஸ்வயநலத்தைப் பாராட்டியோ, பொதுநலத்தைப் பாராட்டியோ, ஒருவழியிலிரங்கினவர்கள் மற்றவர் சொல்வதை கேட்பார்களா ? தர்மவிஷயத்தில் பிராமணர்களுக்கு மற்றவர் போதிப்பதென்பது விபரீதம். பிராமணரல்லாதார் பெண்களின் விவாஹவயதைப்பற்றியும் பேசவேண்டியதில்லை. அதை எப்படி வேண்டுமோ அப்படிச் செய்துக் கொள்ளலாமென்று சாஸ்திரமும், ஸம்பிரதாயமும் இருப்பதால் அது சொன்னதையே சொல்லுவதாகும். இதற்காக வேறுசிலர் சாஸ்திரத்தையே பிரமாணமாக நம்பினவர்களுக்கு "சாஸ்திரமெல்லாம் அவர்களாக ஏற்படுத்திக்கொண்டது. அதனால் அதை நம்பக்கூடாது" என்று கூறினால் அவர்கள் கேட்கமாட்டார்கள். சாஸ்திரத்திலேயே பிரௌடா விவாஹம் விதிக்கப்படுகிறதென்றால்தான் கேழ்ப்பார்கள் என்று சாஸ்திர ஆராய்ச்சி குறைந்த ஆர்யச்சிறுவர்களுக்கு "சாஸ்திரம் பிரௌடா விவாஹத்தைப் போதிக்கிறது" என்று வஞ்சனையாக போதித்து புத்தியைக் கலக்கின்றனர். அதற்காக பாலிகா விவாஹத்தை விதிக்கும் வசனங்களுக்கெல்லாம் பிரௌடாவிவாஹபாமாகப் பொருள் கற்பிக்கின்றனர். இவ்வாறு அக்னிஹோத்திராதி ஸகல வைதிகதர்மங்களுக்கும் அடிஸ்தானமான விவாஹத்திற்கு அங்கமான ஸ்திரீகளின் வயது தாறுமாறாகக் கற்பிக்கப்பட்டு வருகின்றது. இதைப்பற்றி அரசாங்கத்திலும் சட்டம் கற்பிக்கப்படவேண்டுமென் சூழ்ச்சி செய்யப்பட்டு வருகின்றது. இப்படியெல்லாம் தர்மத்தையதிக்கிரமிப்பது தகாதகாரியமென்று ஆங்காங்கு பண்டிதர்கள்மூலமாய் ஸபை நடத்தி அனேக ஆஸ்திக ஜனங்களின் அபிப்பிராயப்படி தீர்மானித்து விஷயத்தை மஹா ஜனங்களுக்கு போதித்திருக்கிறபடி அரசாங்கத்தாருக்கும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது. சமீபத்தில் நெல்லூரிலும் வர்ணாச்ரம தர்ம ஸபையொன்று நடந்தது. அதில் அனேக பண்டிதர்கள் விஜயம் செய்திருந்தார்கள். பிரும்மஸ்ரீ மஹா-௱-௱-ஸ்ரீ T. R.ராம சந்திரய்யாவர்களது அக்கிராசனத்தின் கீழ் பாலிகாவிவாகமே

சாஸ்திரீயம். பிரௌடா விவாஹம் ஜாதிமதாசாரத்திற்கும், சாஸ்திர ஸம்பிரதாயத்திற்கும் முற்றிலும் விரோதமானது என்று பண்டிதர்களின் சாஸ்திர ஆராய்ச்சியில் ஏற்பட்ட ஸித்தாந்தப்படி ஒரே மனதாக எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது. அதனால் யாவரும் தர்மத்தையாதரித்து க்ஷேமத்தையடைவார்களாக.

சுபம் !

பத்திராதிபர்.

---

## பிருஹதீச்சுவரமான்மியம் என்னும்
# சோழமன்னர்களின் சரித்திரம்.

(416-வது பக்கத்தொடர்ச்சி.)

பின்னொருசமயத்தில் அவ்வரசன் பராசரர் தவஞ்செய்த சமீவனத்தை (தஞ்சாவூர்) யடைந்தான். முன்பு அங்கு தஞ்சாபுரேசர் குபேரனுக்குப் பிரசன்னமானார். ஆநந்தவல்லி தஞ்சாசுரனோடு யுத்தம்புரிகையில் ஏகவீரா, ஜயந்தீ, மர்த்தினீ. மஹிஷமர்த்தினீ மாரீ, ரேணுகா, காளீ, கோபீ, என்னும் அஷ்டமஹாசித்திகளாலுமெட்டுத்திசைகளிலும் சூழப்பட்டவளாக இருந்துகொண்டும் அந்த யுத்தத்தில் தஞ்சாசுரனைத்தன் சூலத்தால் குத்திக்கொன்றாள்.

(शूलेन पातयामास तं) तज्जन्नामतः पुरम् ।
प्रार्थयामास तां देवीं स्वस्य प्रख्यातिहेतवे ॥

அப்பொழுதவ்வசுரன் தனக்குப் புகழேற்படவேணுமென்ற காரணத்தால் பட்டணத்திற்குத் தஞ்சாபுரமென்று பெயரிடுமாறு வேண்டிக்கொண்டான். தஞ்சாபுரமென்ற பெயர்படைத்த அச்சமீவனத்தில்அவ்வரசன்ஈசானதிசையில்வஸிஷ்டர்தன்பெயராலோர் தீர்த்தத்தை நிர்மாணஞ்செய்து அதனருகே பிரதிஷ்டைசெய்து பூசித்துவந்த சிவனையும், தெற்குதிசையில் வைத்தியநாதர் பூமாலையைக் கையில் தரித்துக்கொண்டு குதிரையின்மேல் தேவியுடன் வீற்றிருப்பதையும், நிருருதி திசையில் வேததீர்த்தத்தின் கரையில் மஹாதேவியுடன் காரதலேச்சுவரரையும், தஞ்சேசரின்மேற்கில் நீலமேகர்,நரசிம்மர்,கோங்கணசித்தருக்கருளிய கோங்கணேச்சுவரர் முதலியவர்களையு மவ்வற்புதத் தலத்திற்கண்ணுற்று ஆங்காங்கு

தனித்தனியே ஆலயங்களைச் செய்தான். தஞ்சேசருக்குப் பிராகாரத்தையும் கோபுரத்தையும், ஆநந்தவல்லியம்மனுக்கு ஸுந்தா புஷ்கரிணீ யென்னுங்குளப்படிக் கட்டையும் குலோத்துங்கனென்னுமரசன் செய்துமுடித்தான். இவ்வாறு 90 வருஷங்கள் சிவகைங்கர்யங்களைச் செய்துகொண்டு நான்குவர்ணங்கள் நிறைந்துள்ள தங்கள்பிரஜைகளைக்காப்பாற்றிவந்தான். மடங்கள் அன்ன சாலைகள் அக்கிரகாரங்கள் முதலியவைகளைக் கட்டுவித்தான். சிவாலயங்களில் பூஜை மஹோத்ஸவங்களைச் செய்வித்தான். முடிவில்தன் குமாரன் தேவசோளனுக்கு முடிசூட்டி மனைவியுடன் சிவபதமடைந்தான்.

சிவபக்தனுகிய இக்குலோத்துங்கனின் சரித்திரத்தைக் கேட்பவர்கள் மோக்ஷமடைவார்கள்.

## அத்தியாயம். 8.

பிறகு தேவசோளன் தர்மப்படி பூமியை ஆண்டுவந்தான். அவன் காமிகவம்சத்திலுதித்த ஸௌந்திரவல்லி என்னும் தன் மனையாளுடன் தகப்பனைப்போல் சிவபூஜை செய்துவந்தான். அம்மன்னன் ஏராளமாய்ப் பொருள் செலவிட்டு மிக்கத் தேற்சிபெற்ற சிற்பிகளைக்கொண்டு திருவிடமருதூர், கும்பகோணம், திருவெண்காடு, திருப்பூந்துருத்தி, ஸ்ரீவாஞ்சியம், குத்தாலம், மங்களேசம், துர்க்கேசுவரம் முதலியவிடங்களிற் சிவாலயங்களையும், அனேக அக்கிரஹாரங்களையும் கட்டுவித்தான். இவ்வாசன் 60-வருஷங்கள் உலகைக்காப்பாற்றி முடிவில் சிவபதத்தை நாடினன்.

பிறகு சசிசேகரன் என்னும் அவன் குமாரன் சம்பகவல்லி என்னுமோர் மாதை மணந்து தன் தந்தையைப்போல் உலகாண்டுவந்தான். மாயூரம், வைத்யநாதம், கடேசம், (திருக்கடையூர்) வடநாயகம். (திருவிடைமருதூர்) த்ரிகோடிகம், (திருக்கோடிக்காவு) ஸுந்தரேசம். க்ஷீரிணீசம், சிலேச்சுவரம், குசாரண்யம், (தர்ப்பசயனம்) வேதவனம், (வேதாரண்யம்) தீர்க்கேசம். வாருணேச்வரம், கோவடேசம், (திருவாவடுதுறை) கர்வடேசம், தேஜினீவனேச்வரம், (திருவீழிமழலை) காசியில் ஸம்சிதில்யேச்வரம், பில்வாரண்யேச்வரம் என்ற பல சிவாலயங்களையும் பல விஷ்ணுவாலயங்களையும் 60 ஸித்தஸ்தலங்களிலும் ஸ்வயம்பு க்ஷேத்திரங்களிலும் கட்டுவித்தான்,

काबेरीपारहक्चोळस्स एवाभून्महीपतिः ।
तत्कन्या गुणवल्लीति नाम्ना गुणवती सती ।
पाण्ड्याय दत्तवान्राजा धर्मेणामितविक्रमः ।
शिवद्विजान्महीपृष्ठे स्थापयामास शूलिनः ॥
पूजार्थं देवदेवस्य शिवागमविशारदान् ।

இவ்வரசனே காவேரிக்கரைகண்ட சோழன் எனப் பெயர்பெற்ருன். நற்குண நன்னடத்தைகள் பொருந்திய குணவல்லீயென்னுந் தன் மகளை தர்மப்படி பாண்டியதேசத்து மன்னனுக்கு மணஞ்செய்துகொடுத்தான். தேவதேவான சிவனைப்பூஜிப்பதின் பொருட்டு இப்புவியிலாங்காங்கு சிவாகமத்திற்தேர்ந்த குருக்கள்களை வைத்தான்.

இவ்வாறு அரசாளுகையிலோர் சமயம் காவேரியின் பிரவாஹத்தால் ஜனங்களுக்கு மிக்கத்துன்பமேற்படவே, அவர்கள் அரசனிடம் முறையிடத் தலைப்பட்டனர்.

பிரஜைகள்:— நீர் முறைத் தவாது காப்பாற்றிவருகையில் உம்முடைய இராஜ்ஜியத்திலெங்களுக்குக் கஷ்டம் நேரிட்டிருக்கிறது. எங்கள் பயிர்கள், கிராமங்கள், வீடுகளழிந்துபோகின்றனவாதலால் நாங்கள் இனி உங்காட்டிலிரோம்.

இவ்வாறு பிரஜைகள் முறையிடுவதைக் கேட்டவரசன் நதீபுறத்திற்குச் சென்று ஓர் மண்டலம் உபவாசமாகவிருந்து சிவனை ஸ்தோத்திரஞ் செய்து வந்தான்.

சசிசேகரன்:— மங்களத்தையுண்டு செய்வோரே! பெருந்தேவரே! பிரமதகணத்தலைவரே என்னைக்காப்பாற்றுவீராக. உலகத்திற்கெல்லாந் தலைவரே! காளையேறியவரே! சந்திரனைச்சடையிலணியாய்ப் பூண்டவரே! உம்மைப் பணிகிறேன். வேதாந்தப் பொருளே! வ்யோமகேசரே! நதியாசே! கங்கையைத் தாங்குவோரே! என்னைக்காப்பாற்றுவீராக.

இவ்வாறு துதிக்கையில் ஆகாசத்தினின்றும் ஓர் அசரீரிகேட்டது.

ஆகாசவாணி:— "அரசனின் ராஜ்யத்தைக் காப்பாற்றுவாயாக" என்று நான் காவேரியைக் கட்டளையிட்டிருக்கிறேன். இரண்டு காவேரிகளுக்குமிடையிலோர் அணைபோடு. சோழநாட்டிற்கு வேண்டிய தண்ணீருடன் மாத்திரம் இக்காவேரியாறு ஓடட்டும்.

பிறகு சந்தோஷமடைந்த அவ்வரசன் நதீபுரேசரின்னலயத்தில் பிராகாரம் கட்டுவித்தான். காவேரி அரசனின் கனவிற்றோன்றி ஏ சோழமன்னனே சிவனுணைப்படி எனக்கணைபோடுவாயாக. அஃது ஆசந்திரதாரகம் அழிவற்றதாய் விளங்கட்டும் என்று கூறினள்.

अखण्डायास्स खण्डायाः कावेर्याश्च प्रसादतः ।
पञ्चलोहैस्तदा चक्रे सेतुं श्रीरङ्गपूर्वतः ॥

அச்சோழமன்னன் பிரிந்தும் பிரியாதுமுள்ளவக்காவேரியினருளால் ஸ்ரீரங்கத்திற்குக் கிழக்கில் ஐந்துலோகங்களால் அமைக்கப்பட்ட ஓர் அணையை நிர்மாணம் செய்தான். இனி உன்னுட்டில் ஸஸ்யநாசம், பிரஜாநாசம், முதலியவைகளுண்டாகாவென்று இவ்வரசன் கனவிற் காவேரி தோன்றி வாமருளினள்.

इत्थं प्रसादात्कावेर्याः कावेरीपारदृङ्नृपः ।
तदाप्रभृति चोलेन्द्रो विख्यातश्शशिशेखरः ॥

இவ்வாறு காவேரியின் அருளால் அச்சோழமன்னன் காவேரியைக் கரைகண்ட சோழனென்றும் பிரஸித்தியை அடைந்தான்.

இவ்வரசன் 70-வருஷமுலகாண்டு முடிவில் தன்மகனுகிய சிவலிங்கச் சோழனுக்கு முடிசூட்டி தன் மனைவியுடன் கைலை சேர்ந்தான்.

## 9. அத்தியாயம்.

சிவலிங்கச் சோழன் பத்மவல்லி என்னும் மனைவியுடனும் தர்மபரனுயும், சிவகைங்கர்யங்களிலீடுபட்டவனுயும் இருந்துகொண்டு சத்துருக்களை வென்று நீதியுடன் தன் நாட்டை ஆண்டு வந்தான்.

ஸாக்ஷிநாதம், ஸ்வாமிமலை, ஸோமேசம், பட்டீசுவரம், திவ்யேசம், பாதாளேசம், திருவாரூர், முதலியவிடங்களில் சுற்றுப்பக்கங்களில் 119-ஆலயங்களைச் செய்தான்.

सपुराणसरिद्वक्रं समीचक्रे नृपोत्तमः ।

இவ்வரசன் பழையகாவேரியின் தலைப்பைச் சீர் செய்தான்.

பிறகு அவ்வரசன் தன் மனைவி மக்களுடன் திருவாரூரை ( वल्मीकिनगरं ) அடைந்து அங்கு ஸ்ரீ தியாகராஜரின் ருத்ர

பாதத்தைக் கண்டு வணங்கி அவ்விடத்திலேயே சிறிதுகாலம் வசித்தான். ஒரு நாள் வீரனென்னுமவன்மகன் பரிகள் பூட்டிய ரதமேறி அதிவேகமாய்ச் செல்லுகையில் ஓர் பசுங்கன்று சக்கரத்தில் அகப்பட்டு அறைபட்டுப்போயிற்று. இதனைக்கவனியாத அரசகுமாரன் செல்லவே அக்கன்றும் சக்கிரத்தினுலிரண்டு துண்டாக்கப்பட்டமையால் உயிர் துறந்தது.

அரசகுமாரன் அரண்மனையிற் புகவே அவனைத் தொடர்ந்து சென்ற அவ்விறந்த கன்றின் தாய் கண்ணீர் சொரியக் கதறிக் கொண்டு ஆங்கு வாயிலே நின்றது. பலாத்காரமாகப் பல காவலர்கள் அதனைத் தடியாலடித்தும் அஃதவ்விடம் விட்டு அகலவில்லை. மாடியில் நின்று இப்பசுவைக்கண்ணுற்ற அச்சோழ மன்னன் ஏன் இங்கு இம்மாடு இவ்வாறு அலறுகிறது என்று தன் வேலைக்காரர்களை வினவவே அவர்களிற் சிலர் அவன் தனயனல் நிகழ்ந்தவற்றைக் கூறினர்.

இச்செய்தியைக் கேட்ட மன்னன் தன் காதுகளைபொத்திக் கொண்டு சென்று தன் மகனைக் கூப்பிட்டு மந்திரிகளின் முன்னிலையில் கூறலானுன்.

गोब्राह्मणानां हितकृत् चोलवंश इतिप्रथा ।

சோழவம்சத்தரசர்கள் பசுக்களுக்கும் அந்தணர்களுக்கும் நன்மையையே புரிகின்றவர்களென்ற புகழ்.

இத்துஷ்ட மகனுல் அழியப்பெற்றது என்று கூறி அவனை அவ் விரதச் சக்கரத்தினுலேயே இருகூறுக்கினுன். வீரனென்னும் அரசன் மகனும் அப்பசுங்கன்றுபோல் இரண்டு துண்டானுன்.

அவ்வேந்தனின் ஸாஹஸச் செயலைக் கண்கூடாகக்கண்ட ஜனங்களெல்லாம் அரசன் முன் ஒன்றுங்கூறத் துணியாது திகைத்து நின்றனர்.

அப்போழ்தவ்வவையின் கண்ணேரொலி பிறந்தது.

அசரீரி:— இவ்வரசனறம் வழுவாதிருக்கக் கருதியும், மறையோர்களுக்கும், பசுக்களுக்கும் நன்மை புரிவதையே மேற்கொண்டும், தன் மகனிடம் கூட அவன் அன்பு பாராட்டாது அவனை முறையே தண்டித்தானென்ற காரணத்தினுல் அவ்விராஜகுமாரனும், பசுங்கன்றும் முன்போல் உயிர் பிழைத்தெழுமாக "

அக்கணத்திலேயே அவ்விரண்டும் உயிருடன் எழுந்ததைக் கண்டுகளித்த பிரஜைகள் அரசனை நோக்கி ஆனந்தக் கூச்சலிட்டனர். இதனைப் பார்த்த அரசன் அப்பசுவைப்பூஜித்து வணங்கி அதன் கன்றை அருகே கொண்டுவிட்டான். அவ்வாவுந் தங் கன்றைக் களிப்புடன் நாவால் நக்கிக்கொண்டு ஆனந்தக்கண்ணீர்கள் சொரிய அவ்வரசனை நோக்கிற்று.

பிறகு அவ்வேந்தன் வன்மீகேசரையும், தியாகேசரையும் வணங்கிக் கூறலானான்.

சோழன்:— ஏ தியாகராசரே! உம் சேவையால் கிட்டாதது ஒன்றுமில்லை. அன்னைக்குக் கஷ்டத்தைத் தருஞ் ஜென்மாவை ஒழிக்குங்காலம் இன்னுமெனக்குக் கிட்டவில்லை. புத்திரமித்திர களத்திரங்களோ ஒவ்வொரு ஜன்மாவிலுமேற்படுகின்றது.

அத்திருவாரூரிலிப்பொழுதும் ஈசானத்திக்கில் இரதம் கன்று இராஜபுத்திரன், பசு இவைகள் கருங்கல்லினால் அமைக்கப்பட்டு விளங்குகின்றன. தன்னரிய பெரிய செயலைப் பிரசித்தமுறச் செய்யுமாறு அரசனே இவைகளையமைத்தான்.

இவ்வாறானமஹிமைவாய்ந்த அரசன் அறநெறிவழுவாது 66-வருஷங்கள் அரசாண்டு முடிவில் வீரசோழனுக்குப்பட்டமளித்து தான் மனைவியுடன் சிவஸாயுஜ்யம் பெற்றான்.

வீரசோழன், ஹேமவல்லி என்னுமோர் மாதை மணம் புரிந்துகொண்டு தன் தந்தைபோல் அரசாண்டான்.

स सप्तत्यागधामानि तथान्यानि शिवस्य तु ।
वीरचोलाह्वयमुखं कावेर्यास्सोकरोन्नृपः ॥

இவ்வரசன் எழு தியாகராஜாலயங்களையும் மற்றும் சில சிவாலயங்களையும் கட்டுவித்துக் காவேரிக்கு வீரசோழன் என்னும் ஓர் தலைப்புமுண்டுபண்ணினான். இவன் 87-வயதளவும் உலகாண்டு முடிவிற் சிவபதம் பெற்றான். (இன்னும் வரும்.)

பண்டிட், N. வைத்தினாதசாஸ்திரி,
ஸரஸ்வதிமஹால், தஞ்சை.

# ஓர் விக்ஞாபனம்.

பனையப்பட்டி மீனாக்ஷிபுரம் அக்கிரஹாரம் ஸநாதநதர்மஸம்வர்த்தினீஸபை கார்யதரிசி வெங்கடேசய்யர் மஹாஜனஸமூஹத்

தின் முன்னிலையில் வணக்கமாய்த் தெரிவித்துக்கொள்ளும் ஓர் விக்ஞாபனம்:—

ஷையூர் ஷைஸபை பிரஸிடெண்டு ஸ்ரீ ராமஸ்வாமிஅய்யர் கிரகத்தில் ஷையார் பேரனுக்கு அப்தபூர்த்திகல்யாணம் சுக்ல-ஸூ ஆடி-மீ 12வ நடைபெற்றது. அதற்கு பந்துக்கள், கிராம மஹாஜனங்கள் எல்லோரும் வந்திருந்தார்கள். முகூர்த்தம் ஆனதும் ஸம்பாவனைபிரகாணத்தில் ஸ்ரீமடத்திற்கு ஆசார்யஸம்பாவனை செய்யவேணுமென்று கேட்டுக்கொண்டபடி ரூபாய் காலும், ஒரு தேங்காய், வெத்திலைபாக்கு தாம்பாளத்தில் வைத்து உபநிஷத் சொல்லி ஸம்பாவனை செய்தார்கள். பணம்மாத்திரம்தானே மடத்திற்குச்சேருகிறது தேங்காய்வகையறு சேராமல் போய்விடுகிறதே என்று நினைத்து ஷைதேங்காயை கையில் எடுத்துக்கொண்டு, ஐயா! இந்தத் தேங்காய் ஸ்ரீஆசார்யாள் பிரஸாதம். இது ஜயத்தைத்தரும்,ரோகத்தைநிவர்த்திக்கும்,புத்திரோத்பத்தியைத்தரும். இதை யாராவது வாங்குங்களென்று ஸ்ரீஆசார்யாளின் அனுக்கிரஹத்தை சிரமேல் வைத்துச்சொன்னேன். உடனே அங்கிருந்தவர்கள் உத்ஸாஹமாய் ஒருவர்மேலொருவர் போட்டியில் கேட்டதில் ஷை தேங்காயை ரூ. 1—1—0-க்கு குழிபுலைகிராமம் கர்ணம் விசுவநாதய்யர் வாங்கிக்கொண்டார். இந்தப்பணத்தை மடத்து ஸம்பாவனைப்பணத்துடன் அனுப்பவேண்டியதென்று தீர்மானம் செய்தார்கள். ஸம்பாவனைரசீதுகாபியில் இதையும் சேர்த்து எழுதவேணுமென்று தீர்மானமாயிற்று. ஷைமுகூர்த்தத்திற்கு வந்திருந்த திருக்கோகர்ணம் ஸ்ரீ நாராயணஸ்வாமிஅய்யர் அவர்களும், ஸ்ரீ கோகர்ணமய்யாவர்களும், ஸ்ரீ சுந்தரமய்யர் முதலானவர்களும், மற்றுமுண்டான மஹாஜனங்களும் இது நல்ல கார்யமென்றும், இதுபோல் அங்கங்கு நடக்கும் விவாகாதி சுபமுகூர்த்தகாலங்களில் ஸம்பாவனைத் தேங்காய்வகையறுவை விற்று ஸம்பாவனைப்பணத்துடன் அனுப்பும்படி மஹாஜனங்கள் செய்யவேணுமென்றும், தாங்களும் தங்கள்வகையில் நடக்கும் முகூர்த்தங்களில் அப்படி நடக்கும்படி செய்வதாயும் எல்லாரும் ஏகமனதாய் தீர்மானம் செய்தார்கள். இதை ஆர்யதர்மம்வாயிலாக எல்லோருக்கும் தெரிவித்துக்கொண்டேன்.

பனையப்பட்டி வெங்கடேசய்யர்.

# ஓர் உபந்யாஸம்.

கோவல்வீரட்டானம்ஆர்யதர்மாபிவர்த்தினீ, பிராம்மணமஹாஸபைகளின்சார்பாக இவ்விடம் விஜயம்செய்திருந்த ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாகிய ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள்மடம் ஆஸ்தானபண்டிதாள் மஹோபதேசக கவிரத்னம் பிர்மஸ்ரீ பஞ்சாபகேசசாஸ்திரிகளவர்கள் இன்று மாலை (28-7-29) 3-மணிமுதல் ஸ்ரீ பிரகன்னாயகியார்ஸன்னிதானத்தில் மேற்படி தேவஸ்தானம் தர்மகர்த்தாவும் நியாயநிபுணருமான பிர்மஸ்ரீ ராமச்சந்திரய்யாவர்கள் தலைமையின்கீழ் "பிராம்மணர்களும் அவர்களின் கடமையும்" என்றதோர் அரிய உபந்நியாஸம் செய்தார்கள். பல ஆஸ்திகநேயர்கள் வந்து சிரவணித்து ஆன்மலாபப்பேறு அடைந்து ஆனந்தித்தார்கள்.

மேற்கண்ட உபந்நியாஸத்தில் முக்கியமாய் தற்போது பிராம்மண இதரர்கள் பிராம்மணர்களைப்பற்றி கூறும் குறைகள் பலவற்றைப் பூர்வபக்ஷஸித்தாந்தத்துடன் நன்குவிளக்கிப் பிராம்மண ஸமூகம் எவ்விதத்திலும் ஸநாதனமான வைதிகதர்மத்தைக்கடைப்பிடித்து ஒழுகவேண்டிய முறைகள் பலவற்றைச் செவ்வனே உபதேசித்து, இந்நகரில்உள்ள மேற்கண்ட ஸபைகள் நம் பிராசீன ஆஸ்திகதர்மப் பிரசாரம்செய்து லோகோபகாரார்த்தமான வழிகளில்முன்வந்துழைக்கக் கடமைப்பட்டிருக்கிறதென்றும், இதற்கு ஸ்ரீஜகதாசார்யாளுடைய அனுக்கிரஹம் பூர்ணமாய் இருக்கிறது என்றும்தெரிவிக்க பின்பு வந்தனோபசாரத்துடன் ஸபைகலைந்தது.

# ஓர் கண்டனக் கூட்டம்.

கோவல்வீரட்டானம் ஆர்யதர்மாபிவர்த்தனீ, பிராம்மண மஹாஸபைகளின்சார்பாக இன்று சுக்ல-௵ ஆடி-௴ 10௳ (25—7—29) மாலை 3மணிக்கு டில்லி சட்டஸபையில் மறுபடியும் வரப்போகிற விவாஹவயதுநிர்ணயமசோதாவைக் கண்டித்து பிர்ம்மஸ்ரீ கண்ணையாவர்கள் அக்கிராஸனத்தின்கீழ் ஓர் ஸபை கூடிற்று, அவ்வமயம் பிர்மஸ்ரீ சேஷ-கனபாடிகளவர்கள் சுருதி, யுக்தி அனுபவவாயிலாக ஷை மசோதாவைக்கண்டித்து அடியிற்

கண்ட தீர்மானத்தைப்பிரேபேபிக்க ஸபையில் எல்லோராலும் ஏக மனதாய் நிறைவேற்றப்பட்டது.

## தீர்மானம்.

இவ்விவாகவயதுநிர்ணயமசோதா நம் நாட்டின் ஸநாதன தர்மானுஷ்டானிகளான வர்ணாசிரமிகளின் அடிப்படையாயுள்ள தர்மத்தைக்கெடுத்துவிடவும், விசேஷமாய்ப்ப்ராம்மணஸமூஹத்தின் முக்கிய ஸம்ஸ்காரமாகிய கிரஹஸ்தாசிரமதர்மத்தை ஒழித்துவிடவும் கூடியதாய் இருக்கிறது. இம்மசோதாவைச் சட்டமாக்க முன்வந்துள்ளவர்கள் நம் ஆன்றோர்களின் ஆழ்ந்த கருத்துக்களை ஒரு சிறிதும் அறியும் ஆற்றலற்ற ஆசாரசீர்திருத்தக்கக்ஷியைச் சார்ந்தவர்கள். இவர்கள் இம்மசோதாவைச் சட்டஸபைக்குக் கொண்டுவா எவ்விதத்திலும் உரியரல்லர் என்பதற்கும் இவர்கள் பொதுஜனஸம்மதமில்லாது நேர்விரோதமானநிலைமையில் தங்கள் குறுகிய ஆசாரசீர்திருத்தவகுப்பின்முன்னேற்றத்தைத்தற்போது தங்களுக்குச் சட்டஸபையில் கிடைத்துள்ள அதிகாரசௌகர்யத்தைக்கொண்டு அவஸரமாக முடித்துக்கொள்ளப்பார்க்கின்றார்கள் என்பதற்கும் இந்நாட்டு பத்திரிகைகளில் ஏராளமாய்ப் பற்பல இடங்களில் நடைபெற்று பிரசுரிக்கப்படுகிற கண்டனங்களே போதிய சான்று ஆகின்றது.

ஆகவே ஷைமசோதாவை நம் காருண்யராஜாங்கத்தார் இம் மசோதா மதசம்பந்தமுள்ளதென்றோ, அன்றி பொதுஜனசம்பந்தமுள்ளதன்றென்றோ தெரிவித்து சட்டமாக்காது நிராகரித்து ஸநாதனதர்மத்தை நிலைநாட்டவேண்டுமென்று விரும்பப்படுகிறது.

K. R. சுப்ரமண்யசாஸ்திரி,
காரியதரிசி.

---

## ஸாமவேத உபாகர்மம்.

பண்டிதசிரேஷ்டர்களே !

நாளது-வரு ஆவணி-ணீ 21உ (5—9—29) வியாழக்கிழமை சில பஞ்சாங்கங்களில் ஸாமவேதஉபாகர்மமென்றும், சிலபஞ்சாங்கங்களில் 22உ (6—9—29) வெள்ளிக்கிழமையென்றும் இருப்ப

தால், என்று அனுஷ்டிக்கவேண்டுமென்பதை ஆதாரபூர்வமாய் நம் 'ஆர்யதர்மம்'மூலம் எழுதுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஜோஸியம் ஸ்ரீ சுதர்சனசர்மா,
பள்ளத்தூர்.

# இரண்டு ஸந்தேஹங்கள்.

ஆர்யதர்மாபிமானிகாள்!

காாளமான இக்கலியின் கொடுமையால் மேல்நாட்டு நாகரீகத்தில் மோஹங்கொண்டு நமது ஸதாசாரங்களையும் ஸத்கர்மாக்களையும் தியாகம் செய்துவரும் நமது பிராம்மணஸமூஹத்தில் சிராத்தம்மாத்திரம் ஓர்விதமாகச் செய்யப்பட்டுவருகிறதென்பது எல்லோரும் அறிந்தவிஷயம். அக்கர்மாவிலும் சில ஸந்தேகங்கள் ஏற்படுவது சிரத்தாளுக்களுக்கு சிரமத்தை உண்டுபண்ணுகிறது. ஆனதால் அடியிற்கண்ட இரண்டுவிஷயங்களையும் நன்ருகப் பரிசீலனம்செய்து நமது ஆர்யதர்மமூலமாய் ஸித்தாந்தத்தை வசனபுரஸ்ஸாம் தெரிவிக்கவேணுமாய் ஸ்மிருதிப்ரவீணுளான நமது வாசகர்களை பன்முறையும் பணிந்து பிரார்த்திக்கிறேன்.

(1) தர்சத்தில் பிரத்யாப்திகம் வந்தால் எப்படிச்செய்வது?

சிராத்தகாண்ட பூர்வபாகத்தில் "देवताभेदे एकस्मिन् दिने श्राद्धद्वयानुष्ठानं" என்ற பிரகரணத்தில்,

दर्शे क्षयाह आपन्ने श्राद्धं तत्र कथं भवेत् ।
क्षयाहं तु विनिर्वर्त्य दर्शश्राद्धं समाचरेत् ॥

என்று சொல்லப்பட்டிருக்கும் வசனத்தால் பிரத்யாப்திகம்செய்த பிறகு தர்சசிராத்தம் செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது. இதில் விவாதமில்லை. அதே இடத்தில்

यन्मास्ये वाब्दिकं श्राद्धं यस्य पित्रोर्भवेदिह ।
प्राक्पिण्डदानात्तन्मासि पार्वणं न समाचरेत् ॥

पिण्डदानात् = आब्दिकश्राद्धीय पिण्डदानात् प्राक् पार्वणं = दर्शादि श्राद्धं न समाचरेत् इत्यर्थः ।

என்று தீக்ஷிதீயவியாக்யானத்துடன் கூடின வசனத்தால் பிண்டதானத்திற்குப்பிறகு தர்சசிராத்தம் செய்யவேண்டுமென்று ஏற்படுகிறது. இதையனுஸரித்தே அனேக இடங்களில் சிஷ்டர்களால் பிண்டதானத்திற்குப்பிறகே தர்சதர்ப்பணம் செய்யப்பட்டும் வருகிறது.

சிராத்தகாண்ட உத்தரபாகத்தில் दर्शश्राद्धनिर्णयः என்ற பிரகரணத்தில்

दर्शे प्रत्याब्दिके सति विशेष उक्तः स्मृत्यन्तरे—
आब्दिके समनुप्राप्ते दर्शश्चेत् तर्पणं नहि ।
ब्राह्मणान्भोजयेत्पूर्वं पिण्डात् पूर्वं तु तर्पणम् ॥

என்று வசனமிருப்பதால் பிண்டதானத்திற்கு முந்தியே தர்சதர்ப்பணம் செய்யவேண்டுமென்றும், "பிண்டதானத்திற்குப்பிறகு தர்சசிராத்தம் செய்யவேண்டும்" என்று முன் சொல்லப்பட்ட வசனம் அன்னரூபமாய் தர்சசிராத்தம் செய்கிறவன் விஷயமென்றும் அவனும் दर्शे तिलोदकं पूर्वं என்ற நியாயப்படி பிண்டதானத்திற்குமுன் தர்சதர்ப்பணம் செய்துவிட்டு பிண்டதானதி கர்மசேஷம் முடிந்தவுடன் தர்சசிராத்தம் செய்யவேண்டுமென்றும், சிலர் சொல்லுகிறார்கள். இதன் ஸித்தாந்தமெப்படி? இதுவிஷயத்தில் கிரந்தாந்தரங்களில் வசனாந்தரங்கள் ஸ்பஷ்டமாகவுண்டா?

(2) சிராத்தாங்கதர்ப்பண விஷயம்.

பித்ராதிசிராத்தங்களிலேயும் ஸகிருன்மஹாலய சிராத்தத்திலேயும் சிராத்தாங்க தர்ப்பணத்தை மறுநாள் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதல்லவா? அதுவிஷயத்தில் சிராத்தம் செய்தபிறகு தர்ப்பணத்துக்குமுன் கர்த்தாவுக்கு ஆசௌசம் வந்தால் சிராத்தாங்கதர்ப்பணத்தைச் செய்கிறதா? விட்டுவிடுகிறதா? செய்வதென்றால் மறுநாளா? ஆசௌசம் போகும் தினத்திலா? விடுவதென்றால் அங்கவைகல்யம் ஏற்பட்டு அதினால் அங்கியான சிராத்தத்திற்கும் வைகல்யம் வாராதா? இந்த விஷயங்களைத் தெளிவாகத் தெரிவிக்கவேண்டுமென்று மறுமுறையும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

N. K. வெங்கட்டரமணசாஸ்திரி,
நெரிஞ்சிப்பேட்டை

# ஸ்ரீமான் அப்பய்யதீக்ஷித சரிதம்.

(409-வது பக்கத்தொடர்ச்சி.)

## 48. அலங்காரங்கள்.

பின்பு ஒருசமயம் பென்னுகொண்டாதிபதியான வெங்கடபதிபூபாலன் தீக்ஷிதரை சிறிதுகாலம் ஆராதித்துவந்தான். அவனுடைய ராஜ்யகாலம் 1589—1613. காவ்யாலங்காரங்களில் ரஸிகனான அவனுடைய வேண்டுகோளால் குவலயானந்தமியற்றினார்கள்.

नियोगाद्वेङ्कटपतेः निरुपाधिकृपानिधेः ।
अमुं कुवलयानन्दमकरोदप्पदीक्षितः ॥

என்று வெங்கடபதியின் கீர்த்தி நிலைநிற்கும்படி பெயரைக்குறிப்பிட்டிருக்கிறார்.

चित्रमीमांसा, वृत्तिवार्तिकम्, वरदराजस्तवः, तद्व्याख्या ।

சித்திரமீமாம்ஸை, வ்ருத்திவார்த்திகம், வரதராஜஸ்தவம், அதன் உரை இவைகள் அக்காலத்தில் அருளிச்செய்யப்பட்டன. முன் காட்டப்பட்ட 2-புஸ்தகங்கள் நிர்ணயஸாகரம், காவ்யமாலாவில் வெளியாக்கப்பட்டிருக்கின்றன. வரதராஜஸ்தவம் உரையுடன் ஸ்ரீரங்கம் வாணீ விலாஸாலயத்தில் 1927ல் அச்சிடப்பட்டிருக்கின்றது.

விதிரஸாயனம் என்ற மீமாம்ஸா க்ரந்தமும் அக்காலத்திலேயே செய்யப்பட்டது. அதுவும் அச்சுவாஹனமேற்றப்பட்டு வெளியாயிருக்கிறது.

யாதவாப்யுதயத்திற்கு வியாக்கியானமும் அக்காலத்தில் செய்யப்பட்டதே. அதுவும் சில ஸர்க்கங்கள் தவிர அனேகமாய் வாணீவிலாஸத்திலும், மற்ற சில ஸர்க்கங்கள் சின்னமு. ர ஸ்ரீநிவாஸபாட்டாசாரியாராலும் அச்சிடப்பட்டிருக்கின்றன.

दुर्गाचन्द्रकलास्तुतिः, आत्मार्पणं, मानसोल्लासः, अपीतकुचाम्बास्तवः

துர்க்காசந்திரகலாஸ்துதி:, ஆத்மார்ப்பணம், மானஸோல்லாஸம், அபீதகுசாம்பாஸ்தவம் இவைகளும் வாணீவிலாஸாலயத்தில் அச்சிடப்பட்டிருககின்றன.

யாதவாப்யுதய வியாக்கியானத்தின் தொடக்கத்தில் கீர்த்திபெற்ற சந்திரகுலத்தில் ஜனித்த ராமராஜனுடைய பிள்ளையான திம்மராஜனுக்கு கோபீதேவியிடம் உண்டானவனும், மலயகிரியிலும் ராமஸேதுவிலும் ஜயஸ்தம்பம் நாட்டினவனுமான சின்ன

திம்மனால் வேண்டப்பட்டுச் செய்ததாக தீக்ஷிதாள் சொல்லுகின்றனர்.

அந்த சின்னதிம்மன் எங்கு அரசாண்டான் முதலான விபரம் நன்குபுலப்படவில்லை.

கீழ்க்கூறிய ஸ்தோத்திரங்களில் दुर्गाचन्द्रकलास्तुतिः துர்க்கா சந்திரகலாஸ்துதியானது தேவீஸப்தசதீ என்று வழங்கப்படுகிற தேவீமாஹாத்ம்யத்தின் ஸாரத்தையறிவிக்கும் ஒரு சிறுநூலாகும். அதற்கு உரையும் அவர்களால் ஆக்கப்பட்டிருக்கின்றது. அது வெகுநாட்களுக்கு முன்னமே புதுக்கோட்டையில் நடந்துவந்த ஒரு ஜர்னலில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

आत्मार्पण ஆத்மார்ப்பணம்- ஒருஸமயம் தனக்கு மனது அதீனப்படாத காலத்திலும், சிவபெருமானிடம் நிலைகொண்டிருக்கிறதா ? என்று அறிய விரும்பி, கனகம் என்ற ஊமத்தங்காயை அறைத்து நீருடன் பானஞ்செய்து ஸ்துதித்தனர். அக்காலத்தில் சிஷ்யர்கள் எழுதிக்கொண்டனர். அந்நூலே ஆத்மார்ப்பணம் என்பது. பகவானிடம் அந்தரங்க பக்தியை அறிவிக்கும் இந்நூல் யாவராலும் மனப்பாடம் பண்ணப்பட்டு ஆபத்காலங்களில் சொல்லப்படுகிறது. இதற்கு சிவானந்த யோகிகள் செய்த வியாக்யானம் ஒன்று உண்டு. உரையுடன் அந்நூல் காசியில் பிரசுரமாயிருக்கிறது. இதை உன்மத்தபஞ்சாசத்து என்றும் சொல்வதுண்டு.

मानसोल्लासः மாநஸோல்லாஸம்- இது மனதை நோக்கி உபதேசம் பண்ணி, பரமசிவனை பஜனம் பண்ணவேண்டும் என்று அறிவிக்கும் சிறு நூல்.

अपीतकुचाम्बास्तवः அபீதகுசாம்பாள் ஸ்தவம்- திருவண்ணாமலையில் தான் அருணாசலநாதரையும், உண்ணாமுலைபம்பாளையும் தர்சிக்கச் சென்றகாலத்தில் நடுக்கஜ்வரம் வரவே, தர்சனம் பண்ணும் வரை இந்த ஜ்வரத்தை நிறுத்தவேண்டும் என்று அம்பாளைப்பற்றி இயற்றின சிறு ஸ்தோத்திரம், உடனே அவ்வாறே ஜ்வரம் தணிய, தர்சனம் பண்ணிக் கிரமமாய் அந்நோயைப்பின்பு அனுபவித்து, தீக்ஷிதாள் தள்ளினார்கள் இப்போதும் திருவண்ணாமலையில் கட்டியங்கூறுகிறவர்களால் ஆலயத்தில் இந்த ஸ்தோத்திரம் அம்பாளின் சந்நிதியில் சொல்லப்பட்டுவருகிறது.

(தொடரும்.)

கே. வி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.